# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## ஆறாம் திருவாய்மொழி - மாலுக்கு
## ஆழ்வார் எம்பெருமானோடு கலந்து வாழப் பெறாமையால் மிக நைந்து, தம் உடைமைகள் தாமே தம்மை விட்டு அகன்றமையை, பிரிந்து வருந்தும் தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கும் பாசுரத்தால் அருளிச் செய்தல்

** மாலுக்கு * வையம் அளந்த மணாளற்கு *
நீலக் கரு நிற * மேக நியாயற்கு **
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு * என் கொங்கலர்
ஏலக் குழலி * இழந்தது சங்கே 1

சங்கு வில் வாள் தண்டு * சக்கரக் கையற்கு *
செங்கனி வாய்ச் * செய்ய தாமரைக் கண்ணற்கு **
கொங்கலர் தண்ணந்துழாய் * முடியானுக்கு * என்
மங்கை இழந்தது * மாமை நிறமே 2

நிறம் கரியானுக்கு * நீடு உலகுண்ட *
திறம் கிளர் வாய்ச் * சிறு கள்வன் அவற்கு **
கறங்கிய சக்கரக் * கையவனுக்கு * என்
பிறங்கு இருங்கூந்தல் * இழந்தது பீடே 3

பீடுடை நான்முகனைப் * படைத்தானுக்கு *
மாடுடை வையம் * அளந்த மணாளற்கு **
நாடுடை மன்னர்க்குத் * தூது செல் நம்பிக்கு * என்
பாடுடை அல்குல் * இழந்தது பண்பே 4

பண்புடை வேதம் * பயந்த பரனுக்கு *
மண் புரை வையம் * இடந்த வராகற்கு **
தெண் புனல் பள்ளி * எம் தேவ பிரானுக்கு * என்
கண் புனை கோதை * இழந்தது கற்பே 5

கற்பகக் காவன * நற் பல தோளற்கு *
பொற் சுடர்க் குன்று அன்ன * பூந்தண் முடியற்கு **
நற் பல தாமரை * நாள் மலர்க் கையற்கு * என்
விற் புருவக் கொடி * தோற்றது மெய்யே 6

மெய் அமர் பல் கலன் * நன்கு அணிந்தானுக்கு *
பை அரவின் அணைப் * பள்ளியினானுக்கு **
கையொடு கால் செய்ய * கண்ண பிரானுக்கு* என்
தையல் இழந்தது * தன்னுடைச் சாயே 7

சாயக் குருந்தம் * ஒசித்த தமியற்கு *
மாயச் சகடம் * உதைத்த மணாளற்கு **
பேயைப் பிணம் படப் * பால் உண் பிரானுக்கு * என்
வாசக் குழலி * இழந்தது மாண்பே 8

மாண்பமை கோலத்து * எம் மாயக் குறளற்கு *
சேண் சுடர்க் குன்றன்ன * செஞ்சுடர் மூர்த்திக்கு **
காண் பெரும் தோற்றத்து * எம் காகுத்த நம்பிக்கு * என்
பூண் புனை மென்முலை * தோற்றது பொற்பே 9

பொற்பமை நீள் முடிப் * பூந்தண் துழாயற்கு *
மற் பொரு தோள் உடை * மாயப் பிரானுக்கு **
நிற்பன பல் உருவாய் * நிற்கு மாயற்கு * என்
கற்புடையாட்டி * இழந்தது கட்டே 10

** கட்டெழில் சோலை * நல் வேங்கட வாணனை *
கட்டெழில் தென் குருகூர்ச் * சடகோபன் சொல் **
கட்டெழில் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
கட்டெழில் வானவர் * போகம் உண்பாரே 11

**அடிவரவு:** மால் சங்கு நிறம் பீடு பண்பு கற்பகம் மெய் சாய மாண்பு பொற்பு கட்டு உண்ணும்

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---